1995 நவம்பர் 2]

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

36. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1991–92-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

37. தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் 1993–94–ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

38. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1993–94-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1995.)

2. 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1995.)

3. 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1995.)

4. உள் துறையின் 3–8–1992 ஆம் நாளிட்ட 1364–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கான பிழை திருத்தம்.

5. 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/1995.)

6. 25–10–1993 அன்று பேரவை முன் வைக்கப்பட்ட உள் துறையின் 28–6–1993 ஆம் நாளிட்ட 934-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் பிழை திருத்தம் செய்வது குறித்து உள் துறையின் 14–8–1995-ஆம் நாளிட்ட 26058/95-3 கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.